நகல்

19.2.1906 அனந்த கிருஷ்ணன்

நகல்-1

ஸ்ரீ

க்ஷேமம். திருஞானமுத்திரை துணை. தென்திருப்பேரை,
19-2-1906.

ஸ்ரீமது ம.ள.ள. ஸ்ரீ ஸாமிநாதையரவர்களுடைய திவ்ய ஸ்ரீபாத பத்மங்களிலே அடியேன் அனந்த கிருஷ்ணன் தண்டம் ஸமர்ப்பித்து விண்ணப்பம். இவடம் யாவரும் க்ஷேமம். அவடத்தில் தம்பி கலியாணசுந்தரம் முதலானோர் க்ஷேமத்திற் கடிக்கடி ஸ்ரீமுகம் வரைவித்தருளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தங்களை நான் கடைசியில் சந்தித்தபோது மார்கழி மீ வெக்கேஷனில் அவசியம் திருச்செந்தூர் வரை வருவதாகச் சொல்லியிருந்தீர்கள். அவ்வண்ணம் வந்து சேருவீர்கள். தெண்டனிட்டுக் கொள்ளலாமென்றிருந்தேன். வராததைப்பற்றி மனவருத்தங் கொண்டிருக்குஞ்சமயத்தில் தங்களுக்கு மஹாமஹோபாத்யாயப் பட்டங் கிடைத்திருந்தமை பேப்பர் மூலமாகத் தெரிந்து பேரானந்தமடையலானேன். நேற்று எங்களுர் ஸ்கூலில் ஒரு மீட்டிங்கு கூடியதில் அன்று டாக்டர் கிருஷ்ணய்யங்கார் மேற்கண்ட விஷயத்தைப் பற்றி லேசா யொருபிரசங்கஞ் செய்து அனைவருக்குந் தெரிவித்தார். அப்போது அடியேனும் அதுவிஷயமாக அடியாற் கண்டிருக்கும் பாடலையும் பாடினேன். திருவரங்கச் சிலேடை வெண்பாவை ம.ள.ள.ஸ்ரீ - கலெக்டர் துரைமரங்க ராஜா அவர்கள் அச்சிட்டுத் தருவதாக வாங்கிச் சென்னைக்கே அனுப்பியிருக்கிறார்கள். அதைக் கிட்டத்திருந்து தான் திருத்தல் செய்ய நமக்கிட மின்மையால் க்ரஹசேஷ்டைகளும் வியாச்சியங்களும் வந்து நேர்ந்துகொண்டேயிருக்கிறது. இப்போதும் ஒரு அப்பீல் கேஸ் அநுகூலஞ் செய்யும்படிக்குக் கொடுக்காதர் அவ்வாறும் அருள்செய்தார். அந்தப் பாடலும் எழுதியிருக்கிறேன்.

இந்த லெட்டர் வந்த விபரத்துக்கும் எல்லாருடைய க்ஷேமத்திற்கும் அடிக்கடி பதிலனுப்பும்படி மிகவும் பிரார்த்திக்கிறேன்.

கவி. ஸ்ரீ. அனந்தகிருஷ்ணன்.

கட்டளைக் கலித்துறை. சிலேடை

சங்கம் முழங்கிடநம் பாரதிபதி சார்ந்தகுகன்
பொங்குந் தமிழ்முனி யானந்தமேவப் புலவர்கவி

நகல்

பேரை
அநந்தகிருஷ்ணையங்கார்.



யெங்கும் புகழ்ந்திடப்பட்டமன்றேய்ந்தவரைமன்ன
மங்கலப்பேர்ப்பட்ட ஸ்ரீ சாமிநாதையன் வாய்ந்தனனே —
சங்கம் = சங்க- தமிழ்ச்சங்கம்) நம் பாரதிபதி = பிரமன் —
எட்வர்ட் சக்ரவர்த்தி) குகன் = குகவேடன் - தமிழுக் கதிபதி
யான சுப்பிரமணியன்) புலவர் = தேவர்- கவிஞர்) கவி =
செய்யுள் - வாணரம்)

கேல் பாட்டு

கொடுத்த கடன் வெளை கைவந்து கூடக் கொடும்பகைஞர்
கருத்தமனது மிகவாடக் கோர்ட்டதிகாரியுள்ளம்
அருத்தசுத்தீர்ப்பை யுறுதி செய்வாய மரர்க் கிறுகும்
எடுத்து முன்னிந்த நிறைக்காத பேரைக் கிறையவனே ॥ ॥

நகல்

70. ✓ பக். 142

37

தென்திருப்பேரை
அநந்ததிருவேங்கடையங்கார்.
. 19.2.1906
வரி.47. பக்.2

ஸ்ரீ

P. 298-300;
த.க. Vol C
Copied

46